DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC–1/2024

Prosecution witness – PW 7

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.முத்துக்குமார் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused present)

03.02.2026 – 03.45 PM

முதல் விசாரணை:–

1. நான் கடலாடி குரூப் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.6 முனியசாமியை தெரியும். அவர் இந்த சம்பவ சமயத்தின் போது கடலாடி குரூப் கிராம நிர்வாக அலுவலராக கூடுதல் பொறுப்பு வகித்து வந்தார்.

2. கடந்த 04.01.2023ம் தேதி நாங்கள் பணியில் இருந்த போது கடலாடி காவல் நிலையத்திலிருந்து எங்களுக்கு அழைப்பு வந்தது. எங்களை நெறிஞ்சிப்பட்டி கிராமத்திற்கு போலீசார் அழைத்தார்கள். நாங்கள் அங்கு சென்றோம். போலீசார் எதிரி சேவுகராஜிடம் பேசிக்கொண்டிருந்தார்கள். நான் கிராம நிர்வாக அலுவலரோடு அங்கு இருந்தேன். அப்போது போலீசாரிடம் எதிரி சேவுகராஜ் கொடுத்த ஸ்டேட்மெண்டில் முதலில் கிராம நிர்வாக அலுவலர் முனியசாமி கையொப்பம் செய்தார். அதன் பிறகு நானும் கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான்.

3. எதிரியின் வீட்டில் வைத்து போலீசார் ரூ.50,000 பணம், டாலர் செயின், மோதிரம் மற்றும் சில பொருட்களை கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சியில் நானும் கிராம நிர்வாக அலுவலர் முனியசாமி கையொப்பம் செய்தார். அதன் பிறகு 02.15 மணியளவில் கமுதியில் உள்ள வங்கிக்கு போலீசார் எங்களை வரச்சொன்னார்கள். வங்கியில் வைத்து எதிரி சேவுகராஜ்

அடகு வைத்திருந்ததை போலீசார் அங்கு வைத்து கைப்பற்றினார்கள். அந்த பொருள் தற்போது என்ன என்று எனக்கு தெரியாது. அது ஒரு நகை, பொருள். அங்கு வைத்து தயார் செய்யப்பட்ட அத்தாட்சியிலும் நானும் கிராம நிர்வாக அலுவலர் முனியசாமியும் கையொப்பம் செய்தோம். எதிரி சேவுகராஜை தெரியும். அவர் ஆஜர் எதிரி தான். இது தொடர்பாக போலீசார் விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் மேற்சொன்ன தகவல்களை தான் சொன்னேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>

நான் கடந்த 7,8 வருடங்களாக கிராம உதவியாளராக இருந்து வருகிறேன். நான் அடிக்கடி காவல் நிலையம் சென்று கையொப்பம் செய்து வருவேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை எந்த தேதியில் எங்கே வைத்து விசாரித்தார்கள் என்றால் 04.01.2023ம் தேதியில் நெறிஞ்சிப்பட்டி கிராமத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். நாங்கள் கடலாடி காவல் நிலையம் செல்லாமல் நேரடியாக நெறிஞ்சிப்பட்டிக்கு சென்றோம் என்றால் சரிதான். நெறிஞ்சிப்பட்டிக்கு யார் யார் எல்லாம் சென்றோம் என்றால் நானும் கிராம நிர்வாக அலுவலர் சென்றோம்.

நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்றால் கிராம நிர்வாக அலுவலர் தான் படித்து பார்த்தார். அவர் சொன்னதன் பேரில் கையொப்பம் செய்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. நெறிஞ்சிப்பட்டி கிராமத்தில் எவ்வளவு மணி நேரம் இருந்தோம் என்றால் சமார் 1/2 மணி நேரம் இருந்தோம். அங்கு வைத்து எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் 1 கையொப்பம் மட்டும் செய்தேன். என்ன பொருள் எவ்வளவு எடை கொண்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நெறிஞ்சிப்பட்டியிலிருந்து காவல் நிலையம் வந்தோம் என்றால் சரியல்ல. கமுதி வங்கிக்கு வரச்சொன்னதன் பேரில் அங்கு சென்றோம். அங்கு வைத்து எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் 1 கையொப்பம் மட்டும் செய்தேன். நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்து என்றால் எனக்கு தெரியாது. எனக்கு எழுதப்படிக்க தெரியும் என்றால் சரிதான்.

நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், என்னுடைய மேலதிகாரி கேட்டுக்கொண்டதன் பேரில் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி